# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690
தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **17 மார்ச் 2019** | **தவக்காலம் இரண்டாம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

இயேசுவிற்கு மிகவும் நெருக்கமானவர்களே! தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறுத் திருவழிபாட்டிற்கு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்! புயலுக்குப்பின் அமைதி, இரவுக்குப்பின் பகல், துன்பத்திற்குப் பின் மகிழ்ச்சி என்பதைப்போல் இயேசுவின் பாடுகளுக்குப்பின் மகிமை உண்டு என்ற ஆழ்ந்தப் பொருள் நிறைந்த நம்பிக்கையை நாம் மனதினில் பதிவு செய்கிறது இன்றைய வாசகங்கள். மலையின் மேல் ஏறி இன்று நாம் இயேசுவின் உருமாற்ற விழாவைக் கொண்டாடுகிறோம். இது இயேசுவின் வாழ்வில் நடந்த வித்தியாசமான நிகழ்வு. இந்த நிகழ்வு நடந்த இடமாக மலை கருதப்படுகின்றது. மலைமீது இயேசு தோற்றம் மாறினார் என்பது கடவுளுக்கும், மனிதருக்கும் பாலமாக இயேசு உள்ளார் என்பதைக் காட்டுகிறது.

இயேசுவின் பணிவாழ்வில் இரு மலைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒன்று, தாபோர் மலை. இரண்டு, கல்வாரி மலை. இயேசு தாபோர் மலையில் உருமாறினார். கல்வாரி மலையில் உருச்சிதைந்தார். தாபோர் மலையில் அவரருகே எலியாவும், மோசேயும் இருந்தனர். கல்வாரி மலையில் இரு கள்வர்கள் இரண்டு புறமும் இருந்தனர். தாபோர் மலையில் “இங்கேயே இருப்பது நல்லது“ என்று மகிழ்ந்த பேதுருவை, “அவரை எனக்குத் தெரியாது“ என இயேசுவை மறுதலிக்க வைத்தது கல்வாரி மலை. தாபோர் மலையில்; “இவரே என் அன்பார்ந்த மகன்“ என்று தந்தை இறைவன் மகிமைப்படுத்தும் குரல் ஒலித்தது. கல்வாரி மலையில் “என் இறைவா, என் இறைவா, ஏன் என்னை கைநெகிழ்ந்தீர்“ என்ற இயேசுவின் குரல் ஒலித்தது. தாபோர் மலையின் மகிமையும், கல்வாரி மலையின் வேதனையும் இயேசுவுக்கு ஒன்றுதான். போற்றுவார் போற்றலும், தூற்றுவார் தூற்றலும் அவரை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. அவர் தம் இலட்சியத்தை மட்டுமே முன்னிருத்தி, தன் பணிவாழ்வின் பயணத்தைத் தொடர்ந்தார்.

இந்நிகழ்வு நடந்ததின் நோக்கம் என்ன, தாக்கம் என்ன? முதலாவதாக, இயேசு இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பதை சீடர்கள் உணர்ந்து, நம்பிக்கையில் இன்னும் ஆழப்படவே இந்த உருமாற்றம் நிகழ்கின்றது. இரண்டாவதாக, இறைமகன் தந்தையின் விருப்பப்படி சிலுவைச் சாவை ஏற்க வேண்டும் என்பதை சீடர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக் இந்நிகழ்வு ஏற்பட்டது. மூன்றவதாக, மாட்சியும், துன்பமும், பாராட்டும் அவமானமும் மானிட வாழ்வு என்னும் நாணயத்தின் இருபக்கங்கள் என்பதையும் இந்நிகழ்வு உணர்த்துகின்றது. இத்தகைய உணர்வுகளோடு நாமும் நம்மையே இக்கல்வாரி பலியில் ஒப்புக் கொடுப்போம். நாம் அனைவரும் இயேசுவின் ஒருடலாய் மாறுவோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




பள்ளி விடுமுறை காரணமாக இவ்வாரத்திலிருந்து தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது. மீண்டும் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், 31-03-2019 முதல் ஆரம்பமாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## சிலுவைப்பாதை பக்தி முயற்சி



நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில், தவக்காலத்தின் **ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இரவு 8 மணிக்குத் தமிழில்** சிலுவைப் பாதையும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். இயேசுவின் சிலுவைப் பாடுகளைத் தியானித்து, உள்ளத்தில் மாற்றம் பெற்று தவக்காலத்தை அர்த்தமுள்ள விதத்தில் அனுசரிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## GIFT திட்டத்திற்காக இரண்டாம் காணிக்கை

இவ்வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை, நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். இக்காணிக்கையானது, நம் உயர்மறைமாவட்டத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புக்களுக்காகவும், கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும்.

தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

## தவக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், தவக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

ONE
OFFICE FOR THE NEW
EVANGELISATION

## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

### இன்று மதியம் 2:30 மணி




ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.




## தவக்கால ஒப்புரவு அருட்சாதனம்



நமது ஆலயத்தில், வருகின்ற 07-04-2019 ஞாயிற்றுக் கிழமை தமிழில் திருப்பலிக்கு முன்னதாக ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்படும்.

**நேரம்:** காலை 8:45 முதல் 9:30 வரை மற்றும்
மாலை 5:30 முதல் 6:30 வரை.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாவமன்னிப்பு அருட்சாதனம் மூலம் இறையருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | தொடக்க நூல் 15:5-12,17-18 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 27: 1, 7-8, 9, 13-14 |
| **பதிலுரை:** | ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு. |
| **இரண்டாம் வாசகம்:** | பிலிப்பியர் 3:17 - 4:1 |
| **வாழ்த்தொலி:** | ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது "என் அன்பார்ந்த மைந்தர் இவரே! இவருக்கு செவிசாயுங்கள்". |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 9:28-36 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரீசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

God Bless You